

HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH
MUNIR AHMAD AZIM

# FRIDAY SERMON

29 MARCH 2019

(21 RAJAB 1440 AH)

## BENEVOLENT AND "IMPIOUS" POLITICS

## கருணைமிக்க மற்றும் இழிவான அரசியல்

TAMIL VERSION / தமிழ் பதிப்பு

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

2019 மார்ச் 15 –ம் தேதியன்று நடந்த கொடூரமான தாக்குதலால் வருத்ததில் ஆழ்ந்த முஸ்லீம் சமூகத்திற்கு, நியூசிலாந்து பிரதமர் ஜசீந்தா ஆர்டேன் அளித்த ஆதரவுக்கு கலீஃபா என்ற நிலையில் என் சார்பாகவும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் சார்பாகவும் நன்றியியை தெரிவிக்கின்றேன். நியூசிலாந்தின் ஆட்சியாளர் என்ற நிலையில் அனைத்து உலக நாட்டுத்

தலைவர்களுக்கும் குறிப்பாக பாக்கிஸ்தான் பிரதமருக்கு அவர் ஒரு சிறந்த முன்மாதிரி ஆவார்.

கிறிஸ்ட்சர்ச்சிலுள்ள மசூதிகளில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்குப்பிறகு, நியூசிலாந்து பிரதமரின் அணுகுமுறைகள் முழு உலகத்தின் மரியாதை மற்றும் பாராட்டினை பெற்றுள்ளது. நான் உறுதியாக கூறுகிறேன் நல்ல முறையிலான பாராட்டிற்கும் மரியாதைக்கும் அவர் தகுதி பெற்றுள்ளார். அவருடைய உள்ளக்கிளர்ச்சி மற்றும் உறுதிப்பாடுகள் எங்களுக்கு ஒரு புதிய பிரகாசத்தை அளிக்கிறது. இந்த மரியாதையும் உறுதியும் அதாவது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களை ஆதரித்ததும், அப்பாவிகளைப் பாதுகாத்ததும், ஒரு உண்மையான அரசத் தலைவர் என்ற நிலையில் அவரை சிறந்தவராக்குகின்றது. அந்த துரதிஷ்டவசமான கட்டத்தில் தங்களது குடிமக்களை ஒன்றிணைக்கவும், முடிந்தவரையில் அவர்களுக்காக செயல்படவும் செய்தார் என்பது அவரது மகத்துவமாகிறது.

இந்த பெண்மணி ஆட்சிக்கு வந்து 18 மாதங்களாகிறது. நியூசிலாந்தின் வரலாற்றில் என்றென்றும் ஒரு அடையாளமாகிய, இந்த இரத்தக்களரியின் விளைவுகளை அவர் எதிர்கொள்கின்றார். ஆனால் இந்த கடுமையான சோதனைகளை அவர் உறுதி மற்றும் இரக்கத்தினைக் கொண்டு சந்தித்தார். பிரதமரின் அக்கையாளுதல் முறையினை உலகெங்கும் பாரட்டப்படுகிறது. 50 முஸ்லீம் விசுவாசிகளின் உயிரைப்பறித்த கிறிஸ்ட்சர்ச்சிலுள்ள இரண்டு மசூதிகள் மீது ஒரு வெள்ளை மேலாதிக்கவாதி தாக்குதல் நடத்திய சில மணி நேரங்களுக்குள் பிரதமர் ஜசீந்தா ஆர்டோன் முக்காடு அணிந்து தெற்கு நகரத்திற்கு சென்று பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் மற்றும் ஆதரவை அளித்தார்.

அடுத்தநாள், வெல்லிம்டன்னில் (Willington) 38 வயதான லேபர் கட்ச்சியின் தலைவர் மீண்டும் தலையை ஒரு முக்காடுடன் மூடி முஸ்லீம் சமூக உறுப்பினர்களை தழுவினார். அது அவர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த ஒற்றுமை மற்றும் பகிரப்பட்ட துயரத்தில் பங்கேற்கல்களை குறித்து இன்று அநேக நியூசிலாந்து மக்கள் பேசிவருகின்றனர். மட்டுமின்றி வெறுப்பின் கருத்துகளை அவர்கள் நிராகரிப்பவர்களாகயிருக்கின்றனர், இஸ்லாமிய போபியா

கொண்டவர்கள் பரப்புகின்ற வெறுப்பு மற்றும் பகைமையின் கருத்துகளை புறக்கணிப்பவர்களாக அவர்கள் நிலைகொள்கின்றனர்.

ஆனால் ஜசீந்த ஆர்டேன் தலைமை, ஆறுதல் பணிகளுக்கு அப்பால் சென்று, ஆஸ்த்ரேலியா பயங்கரவாதி முன்வைத்த சாவால்களை சந்திப்பதற்காக அதாவது புலனாய்வு அமைப்புக்கு (Intelligence Agencies) கூட தெரியாமலிருந்த இக்காரியங்கள் அதாவது புலனாய்வு அமைப்புக்கு தெரியாமல், பயங்கரவாதி நம் நாட்டிற்குள் நுழைந்து சட்டபூர்வமாக போர் ஆயுதங்களை வாங்கி, இந்த படுகொலைகளை செய்து முடித்தான் என்பதை எதிர்கொள்வதற்காக அந்த படுகொலைகள் நிகழ்ந்த உடனேயே, ஜசீந்த ஆர்டேவின் தலைமையில் சட்டநடவடிக்கைகளைக் குறித்து கலந்தாலோசித்து, இந்த சிக்கல்களைச் சமாளிப்பதற்காக ஆயுத சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி புதிய சட்டத்தை நிறைவேற்றப்போகுவதாக அறிக்கை விடுத்தனர். அவரது பல தொலைக்காட்சி நேர்காணல்களில் (Interviews) ஒன்றில் அவர் மிக அமைதி மற்றும் உறுதியான குரலில் கூறினார்.

**“இப்போது நியூசிலாந்து வருத்தமாக இருக்கிறது. என்பது எனக்குத் தெரியும், ஆனால் நியூசிலாந்து கோபமாகவும் இருக்கிறது. பதில் கிடைப்பதற்கு (பல) கேள்விகள் எங்களிடம் உள்ளது.”**

மசூதிகள் மீதான தாக்குதலுக்குப் பிறகு அமேரிக்கன் ஜனாதிபதி டோனால் டிரெம்ப் தனது உதவியை வழங்க அழைத்த போது, வெள்ளை மாளிகையின் குத்தகைதாரரின் சில கொள்கைகளுக்கு எதிரான தனது கோபம் மற்றும் வெறுப்பினை ஜசீந்த ஆர்டேன் மறைத்துவைக்கவில்லை.

நியூசிலாந்தில் அமெரிக்கன் ஜனாதிபதியின் புகழுக்கு கேடு விளைவிக்கின்ற இந்த பயங்கரவாத தாக்கதலுக்கு போதுமான உதவிகளை வழங்கலாம் என்று வாக்கறுதியளித்து, அதனை மறைத்துவிடுவதற்கு டோனால் டிரெம்ப் முயற்சித்தார். அந்த உரையாடலை வெளிப்படுத்த ஜசீந்த ஆர்டேன் தயங்கவில்லை. எல்லா முஸ்லீம் சமூகங்களுடன் அனுதாபம் மற்றும் அன்பினை காட்ட அவர் மற்றவற்றுடன் அன்னாரை அறிவுறுத்தினார்.

மசூதிகள் தாக்குதலுக்கு ஒரு வாரத்திற்குப் பிறகு, நியூசிலாந்து பிரதமர், இஸ்லாமேபோபியா கொண்டவர்களின் சிடுமூஞ்சித்தனத்திற்கும் விமர்சனங்களுக்கும் ஆளானார். ஆனால் 2019 மார்ச் 22-ம் தேதி வெள்ளிக்கிழமை தொழுகையின் போது இந்த நாட்டின் குடிமக்கள், உலகிற்கு ஒற்றுமையின் மிகுந்த ஒரு படிப்பினையை அளித்தனர். ஹாக்லி மைதானத்தில், அல்-நூர் மசூதியின் அருகில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடினார். பிரதமர் ஜசீந்த ஆர்டேனும் அதில் கலந்து கொண்டார். அனைவரும் கறுப்பு நிற உடையணிந்திருந்தனர். மகிளியர் காவல் துறையினரால் அவர்கள் சூழப்பட்டிருந்தனர். அவர்களின் அந்த வெள்ளிக்கிழமை பிரார்தனை தொலைக்காட்சிகள், வானொலிகள் மற்றும் பல வலைத்தளங்கள் மூலம் ஒளிப்பரப்பப்பட்டது. ஆக்லாந்து, வெல்லிங்டன் மற்றும் பல நகரங்கள் இரண்டு நிமிடம் அமைதியை கடைப்பிடித்தனர்.

அந்த துப்பாக்கிச் சூட்டில் இருந்து தப்பித்த இமாம் கமால் ப்பூட்டோ அவர்கள் பிரார்த்தனைக்கு தலைமை தாங்கினார். வெறுப்பின் அரசியலை கண்டித்தும் இந்த துயரத்திலிருந்து நியூசிலாந்தில் தோன்றிய ஒற்றுமையின் மிகப்பெரிய எழுச்சியைக் குறிப்பிட்டும் அன்னார் உரையாற்றினார். மரியாதை மற்றும் அனுதாபத்தின் அடையாளமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதையோரங்களில் பூங்கொத்துகளை வைத்தனர். வெள்ளிக்கிழமை தொழுகைகளில் கலந்து கொள்வதற்கான பேரணியில் அனைத்து சமூகங்களைச் சார்ந்தவர்களும் இணைந்து தங்களது ஆதரவை தெரிவித்தனர். முஸ்லீம் பெண்களுக்கு ஆதரவின் அடையாளமாக பல பெண்களும் மிகுந்த மரியாதையுடன் முக்காடு அணிந்தனர்.

இந்த கொடூரமான மற்றும் இரக்கமற்ற தாக்குதல்களுக்குப் பிறகு, உலக முஸ்லீம் சமூகம், நமக்கு ஆழ்ந்த துக்கம் இருந்தால்க் கூட, அதனை மீறிக்கொள்ள வேண்டும். நாம் கீழ்படிய கூடாது. இந்த சோதனைகள் நம்மை பலப்படுத்தவும் நமக்குள் ஒற்றுமையை உருவாக்கவும் வேண்டும். ஒரு போதும் அது நம்மை அழித்து விடக் கூடாது. ஒற்றுமை என்பதே வலிமை. இஸ்லாமின் அழகையும், இறைத் தூதர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் நாம் பெற்ற மனிதாபிமானத்தின் பரிபூரணமான தன்மையையும் வெளிப்படுத்தி காட்ட முஸ்லீம்கள் தங்கள் வேதனையிலிருந்து வெளியே வந்து ஒரு உடல்

மற்றும் ஒரு ஆன்மாவை போல் மாறிட வேண்டும். முஸ்லீம்களிடம் ஒற்றுமை இல்லாமல் இருந்தால், நாம் இன்னும் இத்தகைய படுகொலைகளுக்கு சாட்சியாக இருப்போம். **இஸ்லாம் அபாயத்திலாகும்.........**

எனவே இந்த பேருரையை முடித்தக் கொள்வதற்குமுன் நான் உறுதியாக கூறவேண்டும் அதாவது இத்தகைய காட்டுமிராண்டித்தனத்தை இஸ்லாம் கண்டிக்கிறது. எல்லா சமுதாயங்களும் எல்லா சூழ்நிலைகளிலும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இங்கே மௌரீஷியஸில் மசூதிகள், மந்திரங்கள், கோவில்கள், தேவாலயங்கள் மற்றும் போகோடாகளை கணாலாம். அவை அனைத்தும் ஒற்றுமையுடன் முன் செல்லுகிறது. இத்தகைய ஒற்றுமை என்றென்றும் தொடர வேண்டும். அனைத்து சமுதாயங்கள், கலாச்சாரங்கள் மற்றும் விசுவாசங்களை நாம் மதித்து நடக்க வேண்டும். முஸ்லீம்களுக்கு எதிரான இத்தகைய அட்டூழியங்களைக் குறித்து நாம் ஆராய்வோமேயானால், அவை நியூசிலாந்தில் மட்டுமல்ல சீனா, பர்மா, சிறியா, காஷ்மீர் போன்ற நாடுகளிலும் நிகழ்ந்துவருகிறது என்பதை நமக்கு புரிந்து விடலாம்.

## JIHAD OR HOLY WAR

### ஜிஹாத் அல்லது புனித போர்

இஸ்லாமோ போபியாவின் வெவ்வேறு காரணங்களில் மிக முக்கியமான ஒன்று அரசியல் தொடர்புடையதாகும். அதனை விளக்குவோமேயானால், அதாவது சர்வாதிகார மற்றும் இறை எண்ணமில்லா அரசியல்வாதிகள், மீண்டும் அதிகாரத்திற்காக மக்களின் அச்சத்தை பயன்படுத்துகின்றனர். பின்னர் அனைத்து இயற்கை வளங்களையும் ஏகபோகப்படுத்துகின்றனர். இஸ்லாமேபேபியா அவர்களுக்கு இந்த அதிகாரத்தை வழங்குகின்றது. பின்னர் அவர்கள் மக்களின் இதயங்களில் இன்னும் முஸ்லீம்களுக்கு எதிராக வெறுப்பை நுழையவைக்கின்றனர்.

இது முஸ்லீம்கள் அல்லாதவர்கள் முஸ்லீம்களை நோக்கி மட்டும் செய்வதல்ல மாறாக முஸ்லீம்கள், தங்கள் சொந்த முஸ்லீம் சகோதர மற்றும் சகோதரிகளுக்கு எதிராகவும் செய்கின்றனர். இது அரசியல்வாதியின் ஒரு வேறுபாடு ஆகிறது. ஏனெனில் மோதல்கள் மற்றும் போர்கள் அனைத்தும் புனித போர்கள் என்று முத்திரை குத்தப்படுவதை இஸ்லாமிய அமைப்பு அனுமதிப்பதில்லை என்பதை அவர் நன்கு அறிவார்கள். ஆயினும் கூட ஒரு நாடு, குறிப்பாக ஒரு முஸ்லீம் நாடு ஒரு ஆபத்தை எதிர் கொள்ளும் போதும், இக்கூறப்படுகின்ற ஜிஹாதை ஆதரிக்குமாறு மக்களை வற்புறுத்துவதில் முல்லாக்களுடன் அரசியல்வாதிகள் இணைகின்றனர். உண்மையில், இஸ்லாமிய போதனைகளில் காண முடியாத இஸ்லாமிய ஜிஹாத் என்னும் இக்கருத்து அரசியல் வாதிகளுடையவும் முல்லாக்களுடையவும் வாயிலாக உருவாகின்றது. கொள்கையைப் பரப்புவதற்காக ஆற்றலைப் பயன்படுத்த இஸ்லாம் யாரையும் ஊக்குவிக்கவில்லை. ஆனால் தேவை ஏற்படும்போது அதற்கு அவர் தயங்கவும் வேண்டாம். எல்லா நேரங்களிலும் இதுவே நடக்கிறது. கடந்த காலங்களிலும் இதுவே நடந்தது.

மோதல்களின் வரலாற்றைப் பற்றி நாம் ஒரு பார்வையிடுவேமேயானால், முஸ்லீம்கள் போராடிய ஒவ்வொரு போருக்கும் புனிதப் போர் என்று தவறாக முத்திரை குத்தப்பட்டிருக்கின்றது என்பது நம்மை வியக்கவைக்கிறது. முஸ்லீம்கள் அல்லாதவர்களுக்கு எதிராக நடத்திய போர்கள், அல்லது அவர்கள் தங்கள் சகமத அமைப்புகளுக்கு எதிராக செய்த போர்கள். அதாவது சுன்னிகள் சுன்னிகளுக்கு எதிராகவும், ஷியாக்கள், ஷியாக்களுக்கு எதிராகவும் ஷியாக்கள் சுன்னிகளுக்கு எதிராகவும், அல்லது முழு இஸ்லாமிய சமுதாயமும் சேர்ந்து அஹ்மதி முஸ்லீம்களுக்கு எதிராகவும் செய்த போர்கள்….. அவை புனிதப் போர்கள் என்று முத்திரை குத்தப்படவில்லை. ஆனால் புனித போர் என்று வரலாற்றில் முத்திரை குத்தப்பட்டிருக்கும் இத்தகைய போர்களை முஸ்லீம் மத குருக்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஜிஹாத் அதாவது புனிதப் போர் என்று குறிப்பிடுவது உண்மையில் விசித்திரமானது.

மோதல்கள் உலகெங்கிலும் நாம் பார்க்கின்றோம். ஆனால் முஸ்லீம்கள் மட்டுமே அதற்கு ஒரு புனிதப் போரின் தன்மையினை அளிக்கின்றனர். இந்த புனித போர்கள் என்று அழைக்கப்படும் பெரும்பாலான போர்களும் முஸ்லீம்கள்

முஸ்லீம்களுக்கு எதிராக மேற்கொண்டவையாகும். ஜிஹாதின் பெயரில் அவர்கள் ஒருவருக்கொருவரை கொலை செய்கின்றனர். அதற்கு அவர்கள் புனித போரின் தன்மையினை அளிக்கின்றனர். இந்த கேலிக்கூத்து துக்கம் மற்றும் துயரத்தின் அளவினை அதிகரித்து வருகின்றது. வேதனைகளை விளைவிக்கும் இத்தகைய துயரங்களுக்கு நாம் முடிவுகட்ட வேண்டும். உண்மையில் நம் காலத்தின் மிகப் பெரிய முரண்பாடு மற்றும் நகைச்சுவையான இது, இஸ்லாத்திற்கு விமர்சனங்களை வரவழைக்கும் வகையில் அமைந்துள்ளது. முற்றிலும் வேதனையினை அளிக்கும் இத்துயரிலிருந்து கடந்த பதினான்கு நூற்றாண்டுகளாக நமக்கு மீட்சியைப்பெற முடியவில்லை என்பது கவலைக்குரியதாகும். உங்கள் விதியை மாற்ற நீங்கள் விரும்புகொள்கின்றீர்களேயோனால், உங்கள் யோசனைகள், உங்கள் போக்குகள், உங்கள் நடத்தைகள் ஆகியவற்றை மாற்றிக் கொள்ளுங்கள், முஸ்லீம்கள் தங்கள் சிந்தனை வழியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தாதவரை அவர்களால் உலகில் எந்த ஓர் மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது.

உண்மையான மதத்தையும் பக்தியையும் பரப்புவதற்கு வாள் மற்றும் துப்பாக்கியினை பயன்படுத்த வேண்டி நேரம் இது என்று சொல்வதைவிட தவறான வேறு எதுவும் இல்லை. சத்தியத்தின் அழகு மற்றும் சிறப்பினை வெளிப்படுத்துவதில் ஆயுததிற்கு எந்த பங்குமில்லை. மாறாக ஆயுதம் அவர்களை சந்தேகத்திற்கு உள்ளாக்கிவிடுவதுடன் உண்மையை அவர்களிடமிருந்து மறைத்து கொள்கிறது.

இதுபோன்ற கருத்துக்களை தெரிவிப்பவர்கள் இஸ்லாத்தின் நண்பர்கள் அல்ல, அதன் மோசமான பகைவர்கள் ஆவார்கள். அவர்களுக்கு விசனகரமான நோக்கம் உள்ளது. அவர்கள் குறுகிய மனப்பான்மை கொண்டாவர்களும், புத்திக் கெட்டவர்களும், சதாரணமான இயல்பினைக் கொண்டவர்களும் ஆவார்கள். அவர்கள்தான் இஸ்லாத்திற்கு எதிரான ஆட்சேபனைக்கு வழியைத் திறப்பவர்கள். இஸ்லாமின் பரவலுக்கு வாள் தேவை என்று அவர்கள் வாதிடுகிறார்கள். எனவே அவர்கள் இஸ்லாத்தின் தூய்மையை கேள்விக்குள்ளாக்கி, அதன் புனித பெயரை இழிவுபடுத்துகின்றார்கள். இந்த மதத்திற்கு, அதன் மிக அறிவார்ந்த வாதங்கள் மற்றும் வான அத்தாட்சிகளால் எளிதில் அதன் உண்மைதன்மையை நிரூபிக்க முடியும். மாறாக வாளினை பயன்படுத்தி, மக்களை பயமுறுத்தி,

விசுவாசச் செயலைச் செய்ய அவர்களை கட்டாயப்படுத்த வேண்டிய எவ்வித தேவைகளும் இந்த மதத்திற்கில்லை.

இறைவனின் ஊழியர்கள் என்ற வகையில், நாம் அனைவருக்கும் மனிதகுலத்தின் மீது ஒரு கடமை உள்ளது.

**ஒரு நாட்டில் ஒற்றுமை இல்லாவிட்டால், அங்கு செழிப்பு இருக்காது. நம் இரத்தம் ஒரே நிறம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். வெள்ளை இனத்தின் மேன்மைக்காக போராடி முஸ்லீம்க்களுக்கு எதிராக வெறுப்பைத் தூண்டும் இந்த பயங்கரவாதி இறை வழிபாடுதலுக்காக ஒன்று சேருகையின் போது அம்மக்களை படுகொலை செய்ததை பார்க்கும் போது நம் கண்ணீரை அடக்க முடியாது. இது மனிதாபிமானமற்ற தீய செயல்தான். கடந்த வாரம் நான் கூறியது போன்று பயங்கரவாதத்திற்கு எந்த மதமும் இல்லை. ஒரு சில பயங்கரவாதிகளால், நீங்கள் ஒரு மதத்தையோ ஒரு நாட்டையோ ஒருபோதும் விமர்சிக்க முடியாது. பயங்கரவாதம் மற்றும் இனவெறி வேண்டாம் என்று நமக்கு குரல்கொடுப்போம்.**

தீயவர்களுடையவும், குற்றவாளிகளுடையவும், தீமைகளிலிருந்து அப்பாவிகளையும் தூய இதயம் கொண்டவர்களையும் இல்லாஹ் பாதுகாப்பனாக! தங்கள் நடத்தையியை சீர்திருத்தி, மனித குலத்துடன் நெருக்கமாக இருபோர்களின் பாவங்களை அல்லாஹ் மன்னிப்பானாக! ஒட்டுமொத்த மானிட குலத்திடவும் கருணை நிறைந்த உள்ளம் கொண்டவர்களாக அல்லாஹ் அவர்களை மாற்றுவனாக! ஆமீன்.

**Translated by:**

*Naib Amir - Azim Ahmad*
*7339689239*


## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
JAMAAT-UL-SAHIH-AL-ISLAM
KALIAKKAVILAI BRANCH
(TAMILNADU AND KERALA BORDER)
Ph No: 9789180817, 9171977109